கட்டப்பட்டிருந்தால், அந்தக் கடையை கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொடுத்திருக்க வேண்டும். அந்தக் கடைக்கு மின் இணைப்பு கிடைக்காமல் இருக்கும் அல்லது அந்தப் பகுதியில் இருக்கும் மக்கள் ஏதேனும் எதிர்ப்பு தெரிவித்திருக்க வேண்டும். ஆக, இதுபோன்ற காரணங்கள் இல்லாதபட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, உறுதியாக, உடனடியாக கடையைத் திறப்பதற்கு உண்டான நடவடிக்கைகள் நிச்சயமாக துறை ரீதியாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 224, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்அவர்கள்.

224—

மின்சாரம் தயாரித்தல்

***9806—திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி தொகுதி, இராமையன்பட்டி ஊராட்சியில் உள்ள குப்பை சேமிப்புக் கிடங்கில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நகராட்சியின் குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அது நகராட்சி நிருவாகத்தினரிடம் கேட்கப்பட வேண்டிய கேள்வி. ஆகவே, அது மின் துறையின் ஆய்வில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன், இருக்கையில் இல்லை.